**செய்தி வெளியீடு எண்: 196** **நாள்: 11/03/2012**

## <u>செய்தி வெளியீடு</u>

அண்மையில் நடந்து முடிந்த உத்தரபிரதேச மாநில சட்டசபைத் தேர்தலில், திரு. முலாயம் சிங் யாதவ் அவர்களின் தலைமையிலான சமாஜ்வாடி கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றதையடுத்து, அந்தக் கட்சியின் சட்டமன்றத் தலைவராக, திரு. முலாயம் சிங் யாதவ் அவர்களின் மகன் திரு. அகிலேஷ் யாதவ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதனையடுத்து, திரு. அகிலேஷ் யாதவ் உத்தரபிரதேச மாநில முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரபிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ள திரு. அகிலேஷ் யாதவை இன்று (11.3.2012) தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உத்தரபிரதேச மாநில சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றதற்கும், மாநிலத்தின் மிக இளம் முதலமைச்சராக பொறுப்பேற்கவுள்ளதற்கும் தனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது திரு. அகிலேஷ் யாதவ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆசீர்வாதம் எப்பொழுதும் தேவை என்று கோரினார். தன்னுடைய பூரண ஆசீர்வாதம் அவருக்கு எப்போதும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முதலமைச்சர் என்னும் மிகப் பெரிய பொறுப்பை தற்போது அவர் பெற்றுள்ளதாகவும், உத்தரபிரதேச மக்கள் அவரிடம் மிகுந்த எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளதாகவும், இறைவனின் ஆசியுடனும், மக்களின் ஒத்துழைப்புடனும், ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பினையும் அவர் பூர்த்தி செய்வார் என்றும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதனையடுத்து, சமாஜ்வாடி கட்சித் தலைவர் திரு. முலாயம் சிங் யாதவ் அவர்கள் 15.3.2012 அன்று நடைபெறவுள்ள பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்தும்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

திரு. அகிலேஷ் யாதவ் அவர்களின் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று தான் பெரிதும் விழைந்தாலும், 18.3.2012 அன்று நடைபெற இருக்கும் சங்கரன்கோயில் இடைத்தேர்தலில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள இருப்பதால், தன்னால் நேரில் கலந்து கொள்ள இயலவில்லை என்பதைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தன் சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், டாக்டர் மு. தம்பிதுரை, எம்.பி., மற்றும் டாக்டர் வா. மைத்ரேயன், எம்.பி., ஆகியோரை பதவியேற்பு நிகழ்ச்சிக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்தார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 11.3.2012